**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை</u>**

முன்னிலை :- திரு.M.ரவிச்சந்திரன், பிஏ.,பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, பட்டுக்கோட்டை

2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு2053-ஸ்ரீசுபகிருது வருடம் ஐப்பசித் திங்கள் 24 ஆம்நாள்

**இடைநிலை மனு எண் 58/ 2020**

**இன்**

**அசல் வழக்கு எண் 89/2019**

இந்திரஜித் ... **மனுதாரர் / வாதி**

/ எதிர்/

1. புகழேந்தி(இறந்தார்)
2. திருமேகன்,அவருடைய அதிகாரம் பெற்ற
   முகவர் தமிழரசி
3. தமிழரசி ... **எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்**

(இ.ம.எண். 612/2021 நாள் 10.11.2021ம் தேதியிட்ட உத்தரவின்படி 1ம் பிரதிவாதி இறந்தார் என்று சேர்த்தும், 3 ம் பிரதிவாதியை சேர்த்தும், 2 ம் பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் 3 ம் பிரதிவாதி தமிழரசி என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இம்மனு 14.10.2022-ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி.லெனின் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. ஜி. செங்கொடி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17-ன் படி மனுவில் கண்டவாறு பிராதை திருத்தம் செய்ய

**Sd/- M. Ravichandran**

மனுதாரருக்கு அனுமதி வழங்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்: -**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், அசல் வழக்கை நிரந்தர தடை உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மனுதாரரின் மூத்த சகோதரர் என்றும், மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரருக்கு சண்முகவேல் என்ற ஒரு சகோதரர் இருந்து பின்னர் இறந்துவிட்டார் என்றும், மேற்படியார்களின் தாயார் நல்லாயிக்கு சொந்தமாக மூன்று கிரய பத்திரங்கள் மூலம் கிரயம் வாங்கப்பட்ட புல எண் 32/5 ல் 27 குழி, புலஎண் 32/6 ல் 39 குழி மற்றும் புல எண் 32/7 ல் 42 குழி ஆக கூடுதல் 108 குழி நிலம் சொந்தமாக இருந்து வந்தது என்றும், மேற்படி சொத்துக்களின் புல எண் 32/5 மற்றும் புல எண் 32/6 ல் உள்ள சொத்துக்கள்ரோட்டினை ஒட்டினாற்போல் அடுத்த தென்புறம் உள்ளது என்றும், புல எண் 32/.5 மேல்புறத்திலும், அதனை அடுத்த கீழ்புரத்தில் புல எண் 32/6 அமைந்துள்ளது என்றும், மேற்படி புல எண்களை ஒட்டினாற்போல் அடுத்த தென்புறம் புல எண் 32/7 அமைந்துள்ளது என்றும், மேற்படி மூன்று புல எண்களும் ஒரு சேகரமாக ஒரே தாக்காக இருந்தது என்றும், உபயவாதிகளின் தாயார் நல்லாயி கடந்த 02.12.1990 ல் இறந்தபின்னர் மனுதாரரும், மனுதாரரின் சகோதரர்கள் 1ம் பிரதிவாதி மற்றும் சண்முகேவலும், உபயவாதிகளின் தாயார் பெயரில் கூட்டுக்குடும்ப வருமானத்தைகொண்டு கிரயம் வாங்கப்பட்ட புல எண் 32/6 ல் 4 செண்டும், புல எண் 32/7 ல் 4 செண்ட் நிலத்தையும் சேர்த்து மேற்படி மூவருக்கும் சொந்தமான இதர சொத்துக்களையும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரித்துக்கொண்டு வெண்ணிலையாக ஒரு பாக ஏற்பாட்டு ஆவணத்தை கடந்த 21.06.1997 ம் தேதியில் எழுதி உறுதிப்படுத்திக்கொண்டு மூவரும் அவரவர்பாகவீத சொத்துக்களை தனித்தனியாக அனுபவித்து வருவதாகவும், மேற்படி புல எண் 32/5, 32/6, 32/7 சொத்துக்களை பாகம் பிரிக்கும்போது கீழ்புரம் பாதைவிட்டு மூன்று துண்டுகளாக பிரித்து ரோட்டை ஒட்டினாற்போல் வடபுரதுண்டு நிலத்தை 1ம்

**Sd/- M. Ravichandran**

பிரதிவாதிக்கும், தென்புர துண்டு நிலத்தை மனுதாரருடைய இறந்துபோன சண்முகவேலுவிற்கும், நடுதுண்டு நிலத்தை மனுதாரருக்கம் ஒதுக்கிகொண்டதாகவும், வடபுரம் உள்ள 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கிய பாகநிலம் புலஎண்32/5 மற்றும் புல எண்32/6 ல் அமைந்துள்ளனஎன்றம், சண்முகவேலுவிற்கு ஒதுக்கிய பாகநிலம் புல எண் 32/7 லும் மனுதாரருக்கு ஒதுக்கிய நடுபாக நிலம் புல எண்கள் 32/5 மற்றும் 32/6 மற்றும் 32/7 ல்அடங்கியுள்ளது என்றும், மனுதாரருக்கு சொந்தமான நடுபாகநிலத்தை 1ம் பிரதிவாதி ஆக்கிரமணம் செய்ய முற்பட்டதால் மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்யும்போது தாவா சொத்தாக மேற்படி மனுதாரரின் நடுபாக நிலத்தை விவரிக்கும்போது அதற்கான புல எண்ணை குறிப்பிடும்போது புல எண் 32/5 ஐ மட்டும் குறிப்பிட்டு விட்டு தவறுதலாக புல எண் 32/6 மற்றும் புல எண் 32/7 யும் சேர்த்து குறிப்பிட விடுபட்டுவிட்டது என்றும், மேலும் தாவா சொத்திற்கான நான்கெல்லையும் தவறுதலாக பிராது சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுளள்து என்றும், மேற்படி விபரம் தற்போதுதான் தெரிய வந்தது என்றும், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்களில் மனுதாரருக்கு உள்ள உரிமையை மறுத்து கட்சியாடப்பட்டுள்ளதாலும், பாகப்பிரிவினையை மறுத்துள்ளதாலும், தாவா சொத்தில் மனுதாரருக்கு உள்ள உரிமைக்கு விளம்புகை பரிகாரம் கோர வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், மேற்படி விடுபடுதல்கள் மற்றும் தவறுகள் வேண்டுமென்றோ, கவனக்குறைவாக இருந்ததினால் ஏற்பட்டதல்ல என்றும், மேற்படி விபரங்களை திருத்தப்பட வேண்டியது என்பது மிகவும் அவசியமாக உள்ளது என்றும், மேற்படி விபரங்களை திருத்துவதால் வழக்கின் தன்மை மாறப்போவதில்லை என்றும், எனவே மனுவில் கண்டவாறு வழக்குரையை திருத்தம் செய்யவேண்டுமென கோரியுள்ளார்.

**Sd/- M. Ravichandran**

**3. 3ம் எதிர்மனுதாரர்/3ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரையின் சுருக்கம்** : -

மனுதாரரின் மனுவில் கண்ட சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பாகவும், அப்பட்டமான பொய்யுமாக இருக்கின்றது என்றும், மனுதாரர் / வாதி வழக்கு தாக்கல் செய்தபோது புல எண் 32/5 மட்டும் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துவிட்டு தற்பொழுது வேறு சொத்திற்கான புல எண்களை சொத்து விபரத்தில் சேர்க்க வேண்டும் என்றும் கூறுவதும் சட்டப்படி நிலைநிற்கத்தல்ல என்றும், மனுதாரரின்இந்த மனு அனுமதிக்கப்படும்பட்சத்தில், வழக்கின் தன்மையே முற்றிலும் மாறுபடக்கூடும் என்றும், மனுதாரர் / வாதி பிராதில் அவருக்கு புல எண் 32/5 ல் விஸ்தீரணம் 40 குழி நிலம் சொந்தமானது என்று கூறிவிட்டு தற்பொழுது புல எண் 32/5, 32/6 மற்றும் 32/7 ல் வடபாகம் மற்றும் தென்பாகம் நீங்கலாக உள்ள நடுபாகம் 40 குழி என்று சொத்து விபரத்தில் சேர்த்து உரிமை கோருகிறார் என்றும், இந்த இரண்டாம் எதிர்வாதிக்கு இறந்த முதல் எதிர்வாதி 24.05.2018 ல் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரப்படி 2ம் எதிர்வாதி அனுபவித்து வருகிறார் என்றும் மனுதாரர்/வாதி அவருக்கு உரிமை இல்லாத ஆனால், இறந்த முதல் மற்றும் இரண்டாவது எதிர்வாதிகளுக்கு சொந்தமான சொத்துக்களையும் சேர்த்து உரிமை கோர மனுதாரர்/வாதி சட்டப்படி தடைப்பட்டுள்ளார் என்றும், மேலும் மனுதாரர்/வாதி தற்பொழுது பிராதில் சேர்க்க கோரும் சொத்துக்கள் வாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கான எந்தவித எழுத்துப்பூர்வமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரரின் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரரின் மனுவை எதிர்வாதிகள் செலவுத்தொகையுடன் செய்யவேண்டுமென கூறியுள்ளார்.

**4**. இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5**. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,

" மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?

என்பதேயாகும்".

**Sd/- M. Ravichandran**

**6. தீர்வு: -**

இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்ததில், தாவா சொத்தை பொறுத்து, மனுதாரர்/வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதை எதிர்த்து பிரதிவாதிகள் தரப்பில் விரிவான எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு கட்சியாடி வந்து வழக்கு விசாரணைக்காக வாய்தா எழுந்த நிலையில் மனுதாரர் / வாதிக்கு பாத்தியமான தாவா புல எண்ணில் கண்ட சொத்தில் வாதிக்கு எவ்வித உரிமை மூலமும் இல்லை என மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதால் அது குறித்து வழக்குரையை மனுவில் கண்டவாறு திருத்தம் செய்ய மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**7.** மனுதாரர் / வாதி அசல் வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதை எதிர்த்து கட்சியாடி வந்து, மனுதாரர்/ வாதி, அவரது பிரமாண வாக்குமூலத்தில் உபயவாதிகளின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பொதுக் குடும்ப சொத்துக்களை பஞ்சாயத்தார்களின் முன்னிலையில் பிரித்துக் கொண்டு வெண்ணிலையாக ஒரு பாக ஏற்பாடு ஆவணத்தை கடந்த 21.06.1997 ம் தேதியில் எழுதி உறுதிபடுத்திக்கொண்டு உபயவாதிகள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகவீத சொத்துக்களை தனித்தனியாக அனுபோகம் செய்துள்ளதாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

**8.** அசல் வழக்கில் கண்ட உபயவாதிகளுக்கு தலா 40 குழி என பாக வீதமாக பிரிக்கப்பட்டு மனுதாரர் / வாதிக்கு நடுபகுதியிலும், 1ம் பிரதிவாதிக்கு வடபுறமும், தென்புறம் இறந்துபோன சண்முகவேல் ஆகியோர்களுக்கு சம வீத பாகமாக பிரிக்கப்பட்டுள்ளதை வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் 40 குழி நிலத்தை, பிரதிவாதிகள் தாவா சொத்தில் மனுதாரர் / வாதிக்கு உரிமைமூலம் இல்லை என

**Sd/- M. Ravichandran**

கட்சி செய்து எதிர்வழக்குரை கடந்த 03.10.2019 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் உரிய காலத்தில் வழக்குரையில் கண்ட பரிகாரமான நிரந்தர உறுத்துக கட்டளை பரிகாரத்தை நீக்கிவிட்டு விளம்புகை மற்றும் நிரந்தர தடை உறுத்துக் கட்டளை பரிகாரத்தை சேர்க்கக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**9.** எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்தாலும், பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தில் வாதிக்கு உள்ள உரிமை மூலத்தை மறுத்து வந்ததாலும், தாவா சொத்தில் உள்ள புல எண்ணானது தவறுதலாக குறிப்பிட்டுள்ளதை திருத்தம் செய்ய மனுவில் கண்டவாறு சொத்து விபரத்தில் புல எண் 32/5 என்பதற்கு அடுத்தாற்போல் புல எண் 32/6 மற்றும் புல எண் 32/7 ஆகியவைகளை சொத்து விபரத்தில் சேர்க்க வேண்டும் என்பதும், அதுகுறித்து தீர்வு காண விளம்புகை மற்றும் நிரந்தர தடை உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் சேர்த்து வழக்குரையை திருத்தம் செய்து வழக்கு விசாரணை மேற்கொண்டால் தான் அசல் வழக்கின் தீர்விற்கு உகந்ததாக இருக்கும் என்றும், இதனால் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றும், அசல் வழக்கானது விசாரணை தொடங்கும் நிலையில் உள்ளதால் மனுதாரரின் இம்மனுவை நீதியின் நலன்கருதி ஏற்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2022 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

**Sd/- M. Ravichandran,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.

**Sd/- M. Ravichandran**

**<u>இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை

**Sd/- M. Ravichandran,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி

பட்டுக்கோட்டை.

**Sd/- M. Ravichandran**